[5th August 1966

3. தனியார் துறையில் நூற்பாலைகள் நிறுவுவது குறித்து பரிவுரை செய்கையில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஓர் உரிமம் அல்லது அதற்கு மேற்பட்ட உரிமங்கள் கட்டாயம் கிடைக்கும் படிப் பார்த்துக்கொள்ளப்படுகிறது.

4. வெளியூர்களில் உள்ள முக்கிய நகர்கள், கிராமங்கள் அனைத்தையும் இணைக்கிற மின்சார இணைப்புகள் ஏற்கெனவே உள்ளன. தொழில்களை நடத்துவதற்காக எல்லா இடங்களிலும் மின்சாரம் கிடைப்பது வசதியாக இருக்கும்பொருட்டு மேலும் பல இடங்களிலும் இணைப்பு ஏற்படுத்துவது மேற்கொண்டும் ஊக்குவிக்கப்படுகிறது.

5. சென்னையிலும் அதைச் சுற்றிலும் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் மின்சாரத்தின்மீது அனல் மின்சார மேல்வரி விதிக்கப்படுகிறது. பல தொழில்கள் அனல் மின்சாரப் பகுதிக்கு வெளியிலேயே நிறுவப்பட இது ஒரு தூண்டுகோலாக அமைந்துள்ளது.

6. தொழில்களுக்கு அரசாங்க உதவிச் சட்டத்தின்கீழ் தொழில்துறை வழங்கும் கடன்கள் பெரும்பாலும் வெளியூர்ப் பகுதிகளில் வழங்கப்படுகின்றன. மேலும், வெளியூர்ப் பகுதிகளில் உள்ள தொழிலதிபர்களுக்கு இயன்ற அளவு அதிகக் கடன்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

7. வார்ப்படசாலைகள், பொதுக் காரியப் பொறியியல் பட்டறைகள் மாதிரி தச்சு வேலை கருமார் வேலைப் பிரிவுகள் ஏனைய பொது வசதிப் பணி நிலையங்கள் போன்ற பல தொழில் துறைப் பிரிவுகள் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளிலும் கிராமப் பகுதிகளிலும் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ளன. மேலும் அத்தகைய பகுதிகளில் அப் பிரிவுகள் நிறுவப்பட்டும் வருகின்றன.

APPENDIX II.

[*Vide* Answer to Starred Question No. 115 at page 455]

(*a*) The number of students admitted in each agricultural school during the year 1965-66 was 20 and the strength in various schools during the year was as follows :—

	Location of school.	*Districts served by the school.*	*Number of students.*
	(1)	(2)	(3)
1	Katpadi	North Arcot	20
2	Kakuppam	South Arcot	20
3	Conjeevaram	Chingleput	20
4	Paparapatty	Salem and Dharmapuri	20
5	Tiruvarankulam	Tiruchirappalli	19
6	Sakkottai	Thanjavur	19
7	Paramakudi	Ramanathapuram and Madurai	20
8	Karaiyiruppu	Tirunelveli	20
9	Mulucode	Kanyakumari	20
10	Bhavanisagar	Coimbatore	19
11	Ootacamund	Nilgiris	18

5 th August 1966]

(*b*) The concessions granted to the students are as follows :—

The students are paid a stipend of Rs. 40 per month in Ootacamund and Rs. 35 per month in other places. Besides this stipend, they are given a sum of Rs. 5 per month as pocket expenses. They are provided rent-free accommodation and utensils required for running their messes. Library and reading room facilities are provided to the students in each school. For recreation, the students are provided with games articles in the schools. During the course of training, they will be taken on tour to the various places of agricultural interest in the District Research Stations. Livestock Farms, Milk Colony, Poultry Farms and Sewage Farms situated all over the State for studying the development of Agriculture and Animal Husbandry at the cost of the Government not exceeding Rs. 90 per student. No tuition-fee is charged for the course of training which is one year starting from July every year.

(அ) 1965-66-ல் ஒவ்வொரு வேளாண்மைப் பள்ளியிலும் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 20; ஆனல் ஒவ்வொரு பள்ளியிலும் இப்போதுள்ள மாணவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

	பள்ளி இருக்கும் இடம்.	பள்ளிகள் எந்த மாவட்டங்களுக்குப் பயன்படுகின்றன என்பது.	மாணவர்களின் எண்ணிக்கை.
	(1)	(2)	(3)
1	காட்பாடி	வட ஆர்க்காடு	20
2	காகுப்பம்	தென் ஆர்க்காடு	20
3	காஞ்சீபுரம்	செங்கற்பட்டு	20
4	பாப்பாரப்பட்டி	சேலம், தர்மபுரி	20
5	திருவரங்குளம்	திருச்சிராப்பள்ளி	19
6	சாக்கோட்டை	தஞ்சாவூர்	19
7	பரமக்குடி	இராமநாதபுரம், மதுரை	20
8	கரையிருப்பு	திருநெல்வேலி	20
9	முழுக்கோடு	கன்னியாகுமரி	20
10	பவானி சாகர்	கோயம்புத்தூர்	19
11	உதகமண்டலம்	நீலகிரி	18

(இ) மாணவர்களுக்குக் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன :—

உதகமண்டலத்தில் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்குப் பயிற்சி உதவிச் சம்பளமாக ரூ. 40-ம், பிற இடங்களில் ரூ. 35-ம் வழங்கப்படுகிறது. இது மட்டுமின்றி சில்லரைச் செலவுகளுக்காக அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 5 அளிக்கப்படுகின்றது. அவர்களுக்கு இலவச இடவசதியும், உணவகம் நடத்துவதற்குத் தேவையான பாத்திரங்களும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர்களுக்கென நூல் நிலையங்களும் படிப்பகங்களும் அமைக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு விளையாடுவதற்கு விளையாட்டுக் கருவிகளும் பள்ளிகளிலேயே வசதி செய்யப்பட்டுள்ளன. வேளாண்மை, விலங்கின வளர்ப்பு இவற்றின் வளர்ச்சியைப்பற்றி தெரிந்து கொள்வதற்காக, நமது மாநிலம் எங்கும் உள்ள மாவட்ட ஆராய்ச்சி நிலையங்கள், வேளாண்மை நிறுவனங்கள், ஆட்டுப்பண்ணைகள், மாட்டுப் பண்ணைகள், பால் காலனி, கோழிப்பண்ணைகள், கழிவு நீர் அகற்றும் பண்ணைகள், வேளாண்மை முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு மாணவர்கள் சுற்றுலாவில் அழைத்துச் செல்லபடுகின்றனா. இதற்காக ஒவ்வொரு மாணவருக்கும் அரசாங்கம் ரூ. 90-க்கு மேற்படாமல் செலவு செய்கின்றது. இப்பயிற்சிக்காகச் சம்பளம் எதுவும் வாங்கப்படுவதில்லை. பயிற்சிக் காலம் ஒவ்வொரு ஆண்டும் ஜுலை மாதத்திலிருந்து தொடங்கி ஓர் ஆண்டாகும்.